Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 16 | 29-04-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 70

வவுனியா நகரில் தரங்குன்றா தங்க நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்
கணேசா நகையகம்
(சி-7834)
கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா

## வெற்றிவிழாவில் தேசியத் தலைவருக்கு கேடயங்கள் வழங்கிக் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் நேரடி நெறிப்படுத்தலில் ஆனையிறவுத் தளம் வெற்றி கொள்ளப்பட்டதன் மூன்றாம் ஆண்டினதும், தீச்சுவாலை முறியடிப்புச் சமரின் இரண்டாம் ஆண்டினதும் நிறைவையொட்டிய வெற்றி விழாவில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களுக்கு தமிழீழ மக்கள் வெற்றிக் கேடயங்கள் வழங்கி கௌரவித்தனர்.

நேற்றுப் பளையில் நடைபெற்ற வெற்றி நாள் நிகழ்வில் தமிழீழ தேசியத் தலை வர் அவர்களுக்கான வெற்றிக் கேடயங்கள் தளபதிகளிடம் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் வடமராட்சி வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம் வழங்கிய வெற்றிக் கேடயத்தினையும், யாழ். மாவட்ட மக்கள் சார்பாக வழங்கிய வெற்றிக் கேடயத்தினையும், வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி மக்கள் வழங்கிய வெற்றிக்கேடயத்தினையும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை பெற்றுக்கொண்டார்.

யாழ். மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தினர் வழங்கிய வெற்றிக் கேடயத்தினையும்,வல்வெட்டித்துறை ஆதிலக்சுமி கடல் நிறுவனம் வழங்கிய கேடயத்தினையும் வடமராட்சி கிழக்கு விளையாட்டுக்கழகம் வழங்கிய வெற்றிக் கேடயத்தினையும் தளபதி கேணல் கடாபி பெற்றுக்கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட மக்களினால் வழங்கப்பட்ட வெற்றிக் கேடயத்தினையும், கிளிநொச்சி மாவட்ட தனியார் கல்வி நிறுவனத்தினர் வழங்கிய வெற்றிக் கேடயத்தினையும், மட்டு-அம்பாறை மாவட்ட ஜெயந்தன் படையணித் தளபதி லெப்.கேணல் ஜெயக்காந் பெற்றுக்கொண்டார்.

(8ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ தேசியத் தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட கேடயங்களில் ஒன்றை தளபதி கேணல் சூசை பெற்றுக்கொள்கிறார்.

# பல்லாயிரம் மக்கள், தளபதிகள், போராளிகள் கலந்து கொண்ட மாபெரும் வெற்றிவிழா!

## கொட்டும் மழையிலும் சிறப்புற நடந்த நிகழ்வுகள்

**ஆனையிறவுத் தளம் வெற்றி கொள்ளப்பட்டதன் மூன்றாம் ஆண்டினதும், தீச்சுவாலை முறியடிப்புச் சமரின் இரண்டாம் ஆண்டினதும் நிறைவு பெருவெற்றி விழா நேற்று சிறப்புற பளைப் பிரதேசத்தில் இடம்பெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்களும், தளபதிகளும், போராளிகளும் கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாது இவ்விழாவில் உணர்வுடன் கலந்து சிறப்பித்தனர்.**

பளைப்பகுதியில் சிறப்புற அமைக்கப்பட்ட இடத்தில் நேற்றுக் காலை மாலைஎன இருபிரிவுகளாக நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் தமிழீழத் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மூத்ததளபதிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மக்கள் வெள்ளத்தினாலும் வாகனங்களினாலும் ஏ9 வீதி நிரம்பி வழிந்ததால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கடற் கண்காணிப்பில் ஈடுபடவேண்டுமாயின் இந்தியா புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும்

### ரெலோ இயக்கத் தலைவர் எம். சிறிகாந்தா

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இந்தியா இணைய வேண்டும் எனில் புலிகள் மீதான தடையை அந்நாடு நீக்க வேண்டும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் எம். சிறிகாந்தா கூறியுள்ளார்.

கடற் கண்காணிப்பில் இந்தியாவை ஈடுபடுத்த வேண்டும் என அண்மையில் எதிர்க்கட்சிகள் எழுப்பியுள்ள கோரிக்கை குறித்தே அவர் இக்கருத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இந்தியாவின் ஈடுபாட்டை வலியுறுத்தி பொ. ஐ. முன்னணியும், ஜே.வி.பியும் முன்வைத்துள்ள இக்கோரிக்கை சமாதான முயற்சிகளை சிதறடிக்கவே உதவும். இந்தியாவிலுள்ள சில குறிப்பிட்ட தரப்பினரின் ஆசிர்வாதத்துடனேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. புலிகள் மீதான தடையை நீக்காமல் அவர்களுடன் இந்தியா தொடர்புகளை ஏற்படுத்த முடியாது என்றார்.

## புலிகளின் கடிதம் குறித்து ஆராய ரணிலின் தலைமையில் கூட்டம்

(கொழும்பு)

பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக விலகுவது தொடர்பான புலிகளின் கடித்த்திற்கு பதிலளிப்பது குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று பிரதமர் தலைமையில் நேற்று நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர்களான பீரிஸ், மிலிந்த மொறகொட, சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேர்னட் குணதிலக மற்றும் பிரத.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய நிலை குறித்து அஸ்லி வில்ஸ் - பீரிஸ் பேச்சு

சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவரை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் சந்தித்து நீண்ட நேரம் பேசியுள்ளார்.


தற்போது இலங்கையில் எழுந்துள்ள புதிய சூழ்நிலை குறித்து இப்பேச்சுவார்த்தையின்போது விவாதிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. டோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாடு குறித்தும் ஆராயப்பட்டது.

### – கடல் கண்காணிப்புத் தொடர்பான –

## எதிர்க்கட்சிகளின் கடிதம் இந்திய அரசின் பரிசீலனைக்கு

கடல் கண்காணிப்புத் தொடர்பாக சிறிலங்காவின் எதிர்க்கட்சிகள் அனுப்பியுள்ள மனு இந்திய அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளதாக இந்திய தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார். போர் நிறுத்தக் கண்காணிப்பில் இந்தியா ஈடுபட வேண்டும் என அக்கடிதத்தில் கோரப்பட்டிருந்தது.அத்துடன் இக்கடிதம் தொடர்பான பதிலை இந்தியா விரைவில் அனுப்பிவைக்கும் என இந்திய தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்.







பளையில் நேற்றுத் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட கரும்புலி மாவீரர்கள் மற்றும் மாவீரர்களின் நினைவுக் கற்களையும், ஆயுதக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பீரங்கி ஒன்றையும், வெற்றிவிழாவில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# ஏ-9 வீதியில் வாகன விபத்துக்களில் சிக்கி ஒரு வருடத்தில் 12 பேர் உயிரிழப்பு!

## -131 விபத்துக்கள் இடம்பெற்றதாக அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

யாழ் - கண்டி வீதியில் கடந்த வருடம் முதல் கடந்த மார்ச் மாதம் வரை வீதி விபத்துக்களில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி ஏ-9 சாலை வடக்கிற்கும்-தெற்கிற்குமான, மக்கள் போக்குவரத்திற்காக திறந்து வைக்கப்பட்டது. ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையும் 84 வீதி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இதில் ஆறு விபத்துக்களில் மரணங்கள் ஏற்பட்டதுடன் 46 பேர் காயமடைந்துள்ளனர்.33 வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

2003 ஆம் ஆண்டு சனவரி 1ம் திகதி முதல் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையும் 47 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 6 விபத்து மரணங்களும் மற்றும் 25பேர் காயமடைந்தும், 16 வாகனங்கள் சேதமடைந்தும் உள்ளன.

தற்போது ஏப்ரல் மாதம் முதல் விபத்துக்களைக் குறைக்கும் நோக்குடன் தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினரால் நகரப் பகுதிகளில் வாகனங்களின் வேகத்தினை மட்டுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவதையும் இதன் மூலம் தற்போது விபத்துக்கள் ஓரளவுக்கு குறைவடைந்துள்ளதை அவதானிக்கவும் முடிகின்றது. (பா)

# முல்லை பிரதான வீதியில் விபத்தில் இருவர் காயம்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு பிரதான வீதியில் கடந்த வெள்ளியன்று கையேஸ் வானும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இருவர் காயமடைந்து முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

மேற்படி சம்பவத்தின் போது மட்டக்களப்பைச் சேர்ந்த சா.சகாயராஜா(வயது 23) கொழும்பைச் சேர்ந்த ச. இரத்தின குமாரி (வயது 22) என்பவரும் ஒரு மோட்டார் சயிக்கிளில் அதிவேகமாக வந்தபோது வானில் மோதி படுகாயத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

மேற்படி சம்பவமானது அன்றைய நாள் மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. இச்சம்பவத்தை அறிந்த முல்லைத்தீவு காவல் துறையினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ஆ)

# 2002 ஆம் ஆண்டில் முல்லை நகரில்

# 1512 குடும்பங்களுக்குமேல் குடியமர்வு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு நகரப்பகுதியில் கடந்த வருடம் 1512 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைமூலம் முல்லைத் தீவு நகரப்பகுதியில் இருந்த 2479 குடும்பங்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றிருந்தன. ஓயாத அலை-01 இராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளால் முல்லைத்தீவு இராணுவ முகாம் தகர்த்தழிக்கப்பட்ட பின்னர் கடந்த வருடம் முதல் முள்ளிவாய்க்கால், செல்வபுரம், கோயில் குடியிருப்பு, முல்லைப்பட்டினம், மணற்குடியிருப்பு, வண்ணாங்குளம், கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, முல்லைத்தீவு தெற்கு,சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு ஆகிய பிரதேசங்களில் 1512 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கணினி விஞ்ஞான கற்கைநெறி

கிழக்குப் பல்கலைக்கழகம் கணினி, விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறி ஒன்றினை நடாத்தவுள்ளது.

இக் கற்கைநெறிக்கு க.பொ.த சா/த பரீட்சையில் கணிதபாடத்தில் திறமைச்சித்தியும், ஆங்கிலப்பாடத்தில் சாதாரண சித்தி உட்பட ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என கூறப்படுகிறது.

கிழக்குப் பல்கலைக்கழக பரீட்சைப் பகுதி சிரேஷ்ட உதவிப் பணிப்பாளரிடம் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று மேமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கூறப்படுகிறது.

03 மாதங்களைக் கொண்ட இக் கற்கை நெறிக்கான விரிவுரைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜெயந்திநகர் பகுதியில் இரு எறிகணைகள் மீட்பு!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்டு வெடிக்காத நிலையில் இருந்த இரண்டு எறிகணைகள் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளன.

இல. 318 கனகபுரவீதி ஜெயந்திநகரில் உள்ள செ.கமலம் என்பவரின் குடியிருப்புக் காணியில் இருந்தே இந்த எறிகணைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தத் தகவல் உடனடியாக மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.இக்காணியில் மேற்படி குடும்பம் கடந்த மூன்று மாதங் களுக்கு முன்பே குடியேறிவாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கமநல சேவை நிலையத்தின் வருகைக்காக ஏங்கும் மக்கள்!

இடப்பெயர்வு காரணமாக 1991ம் ஆண்டு புதுக்குடியிருப்புக்கு கொண்டு செல்லப்பட்ட அளம்பில் கமநலசேவை நிலையம் இது வரையும் அளம்பிலுக்கு கொண்டு வரப்படவில்லை.

இவ்வலுவலகத்திற்கான கட்டடம் எந்தவித புனரமைப்பும் செய்யப்படாமல் பற்றைகளால் மூடிக் காணப்படுகின்றது. விவசாயிகளே இக்கிராமத்தில் பெருமளவில் வாழ்கின்ற போதிலும் அலுவலக விடயமாக மக்கள் பல மைல் கடந்து முள்ளியவளைக்கே சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாகவும், இவ்விடயமாகப் பலமுறை சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்தபோதிலும் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் இப்பகுதி மக்கள்தெரிவித்துள்ளனர். (20)

## அன்பளிப்பு!

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பொது நூலகத்துக்கு 4500 ரூபாய் பெறுமதியான நூல்களை இளைஞர் ஒருவர் அன்பளிப்புச் செய்துள்ளார். உடுப்புக்குளத்தைச் சேர்ந்த நா. நகுலன் என்பவரே இவற்றை வழங்கினார். (20)

# படையினரின் அண்மைய நடவடிக்கைகளால் அம்பாறை மக்களின் வாழ்வுநிலை பாதிப்பு!

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், அக்கரைப்பற்று மற்றும் பொத்துவில் பிரதேசங்களில் முகாமிட்டிருக்கும் பொலிஸ், இராணுவத்தினர் உசார் நிலையில் செயல்பட்டு வருவதாக அப்பிரதேச வாசிகள் தெரிவிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தற்போது உள்ள முகாம்களை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும், காவல்நிலையங்களை பலப்படுத்துவதாகவும் காவல் சுற்று கம்பி வேலிகளை அமைத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது, அத்தோடு அகற்றப்பட்ட வீதித் தடை காவலரண்களை துப்புரவுசெய்யும்பணியை இராணுவ, பொலிஸ் பிரிவினர் மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள கிராமவாசிகளின் வாழ்க்கை இயல்பு நிலையில் மீண்டும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இராணுவத்தினரின் செயல் பொது மக்களின் அன்றாட வாழ்க்கை நிலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது


## நீங்காத நினைவில் 31ம் நாள்

மண்ணுலகில் 19 05 1944



விண்ணுலகில் 31 03 2003

### அமரர் அந்தோனிப்பிள்ளை செலஸ்ரீன்

இரணைப்பாலை

(முன்னாள் இ.போ.ச.சாரதி முல்லைத்தீவு)

(முன்னாள் ப.நோ.கூ.சங்கத் தலைவர் புதுக்குடியிருப்பு)

வையத்தில் வழிகாட்டி
வாழவைத்த தெய்வமே!
அன்புசேர் பண்பால்
பேரோங்க வாழ்ந்த குல விளக்கே!
மாலையிட்ட மனைவியும் பேரோங்கப் பெற்றெடுத்த
பிள்ளைகளுடன் மருமக்கள் பேத்திகளும்
நின் சோதர சோதரியுடன் உறவினரையும்
தவிக்க விட்டுப் போனமாயமென்ன?

ஆறாத சோகம்! அகலாது உங்கள் நினைவு.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக நாளை காலை 6.30 மணிக்கு இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அப்பாவின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடிவந்து உதவிகளைச் செய்தவர்களுக்கும் நேரில் வருகை தந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பிவைத்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு. (சி-8095) குடும்பத்தினர்


## - புதிதாக அமைக்கப்பட்ட -

# மாவீரர் துயிலும் இல்ல செயற்குழு வடமராட்சி கிழக்கில் அமைப்பு

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின்அரசியல்துறை செயலகத்தில் மாவீரர் துயிலும் இல்ல செயற்பாட்டுக் குழுத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழு செயலாளர் வ. தவராசா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் தலைமையுரையினைத் தொடர்ந்து கடற்புலிகளின் தளபதி மங்களேஷ், தமிழீழ மாவீரர் துயிலும் இல்லங்களின் மேற்பார்வையாளர் காளித், கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன் ஆகியோர் மாவீரர்களின் தியாகங்கள் பற்றியும், அவர்களின் இலட்சியங்கள் பற்றியும்அவர்களுக்குத் துயிலும் இல்லம் அமைப்பதன் முக்கியத்துவம்பற்றியும் கருத்துரைகளை வழங்கினர்.

அதன் பின் வடமராட்சி கிழக்கில் புதிதாக அமைக்கப்பட்ட துயிலும் இல்லத்துக்கான செயற்பாட்டுக்குழுத் தெரிவு இடம் பெற்றது. இதில் இணைப்பாளராக த.முத்துராசாவும், துணை இணைப்பாளராக மூ. சபாரத்தினமும் பிரதி இணைப்பாளராக த. பாலசிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 4 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (11)

## நெக்கோட் உதவி

முல்லைத்தீவு ப.நோ. கூட்டுறவுச் சங்க உப பணிமனை அமைப்பதற்கு நெக்கோட் நிறுவனம் ஒரு கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.முல்லை நகரின் மருதடியில் இதற்கான உப பணிமனை அமைக்கப்படவிருப்பதாக சங்கப்பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

## கொடுப்பனவு வழங்கல்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் கிராம சேவகர் பிரிவில் 75 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. குடும்பமொன்றுக்கு 25,000 ரூபாய் வீதம் கடந்த சனியன்று வழங்கப்பட்டது. (05)


## துயர் பகிர்கின்றோம்

### அமரர் முருகேசு கந்தையா

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரியான மு.குணரத்தினம் அவர்களின் சகோதரரான முருகேசு கந்தையா அவர்கள் 29-04-2003ஆம் திகதி அன்று யாழ்ப்பாணத்தில் அமரத்துவம் அடைந்தமையையிட்டுத் துயருற்றுள்ள அன்னாரின் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்கின்றோம்.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி,
பிரதேச மலேரியாத்தடை
இயக்க உத்தியோகத்தர்கள்.

(3170)

# ஈராக்கில் சனநாயக நடவடிக்கைகளை ஆரம்பிக்க உலகநாடுகளுக்கு அழைப்பு!

## - போர் முடிந்ததாக புஷ் அறிவிப்பு

**ஈராக் மீதான யுத்தம் முடிவடைந்துவிட்டது. அந்த நாட்டில் சனநாயக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அழைப்பு விடுத்துள்ளார். அமெரிக்காவின் மிஜிடன் மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற மாநாடொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

ஈராக்கின் எதிர்காலம் தொடர்பாக இங்கு முக்கியமாக ஆராயப்பட்டிருந்தது. இதே போன்று பாக்தாத்திலும் கூட்டமொன்று நேற்று நடைபெற்றது.


நேற்றைய கூட்டத்தில் சனாதிபதி புஷ் அரபுமற்றும் அமெரிக்கப் பிரமுகர்களை சந்தித்துப்பேசினார்.

பாக்தாத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஈராக்கில் மனிதாபிமான மற்றும் புனரமைக்கும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக் கப்பட்ட ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி, 300 க்கும் அதிகமான ஈராக்கியத் தலைவர்களைச் சந்தித்து உரையாடினார். ஈராக்கின் தேசிய காங்கிரசின் தலைவரும் 10 வருடங்களுக்கு மேல் அமெரிக்காவில் தங்கியிருந்தவருமான மொகமட் சலாபி இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். இருந்தபோதும் ஈராககின் புனர்நிர்மாணம் தொடர்பாக ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் சலாபி சமுகமளித்திருக்கவில்லை.

இதற்கிடையில் 10 நாட்களின் முன்பு பாக்தாத்தில் ஆளுனராக மொகமட் அல்ஜிகைதி தன்னைத் தானே பிரகடனப்படுத்தியிருந்த போதும் அமெரிக்கப் பிரதிநிதிகள் அதனை நிராகரித்து விட்டார்கள்.



பாக்தாத்தில் அமெரிக்க ஆயுதக் களஞ்சிய வெடிப்பில் 12 பேரைப் பலிகொண்ட இடத்தில் காணப்படும் எறிகணையை உற்றுநோக்கும் ஈராக்கிய பெண்மணி.



குண்டு வெடிப்பில் சிதைந்த தனது வீட்டில் நம்பிக்கையிழந்து அமர்ந்திருக்கும் ஈராக்கியர்

## வீரப்பன் தலைக்கு 5.5 கோடி ரூபாய்!

(பெங்களூர்)

சந்தனக் கடத்தல் வீரப்பனின் தலைக்கான பரிசுத் தொகை மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீரப்பன் குறித்து தகவலளிப்பவருக்கு 5.5 கோடிரூபாய் சன்மானம் வழங்கப்படும் என கர்நாடக அரசு தெரிவித்துள்ளது.

## இரவு விடுதியில் குண்டுவெடிப்பு ஏழு பொதுமக்கள் படுகாயம்!

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள இரவு விடுதியில் குண்டொன்று வெடித்ததில் பொதுமக்கள் 07பேர் படுகாயமடைந்துள்ளார்கள்.

இக்குண்டுவெடிப்பை அடுத்து அங்கு பெரும் பதற்றமும் பீதியும் ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம்களை பெருமளவில் கொண்டுள்ள இந்தோனேஷிய நாட்டில் மேற்கத்திய கலாச்சாரத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு தீவிரவாதக்குழுக்கள் ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றன.

இந்நிலையில் தலைநகரில் விமான நிலையத்திற்கு அருகிலுள்ள விடுதி ஒன்றிலேயே தீவிரவாதிகள் வைத்த சக்திவாய்ந்த குண்டு வெடித்தமையினால் 07பேர் படுகாயமடைந்துள்ளார்கள்.

## சார்ஸ் தொடர்பாக பொதுமக்களுக்கு போதிய அறிவுரை வழங்க வேண்டுகை

உலக சுகாதார நிறுவனம் சீன அதிகாரிகளுக்கு விடுத்த அறிவுறுத்தலில் சார்ஸ் வைரஸ் காய்ச்சலைப்பற்றி பொது மக்களுக்குப் போதிய அறிவுரை வழங்குமாறு கேட்டுள்ளது.

சீனப் பத்திரிகைகள் செய்தி பிரசுரிக்கையில் தலைநகரில் ஒருகோடி 40 இலட்சம் மக்களில் 8000பேருக்கு இந்த நோய் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்துள்ளது.

பீஜிங்கில் மட்டும் 1000க்கும் மேற்பட்ட சார்ஸ் நோயாளிகள் உள்ளார்கள்.

அதேநேரம் இந்நோய் காரணமாக 130 பேரில் 56பேர் பீஜிங்கைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

உலக நாடுகளில் மொத்தமாக இந்நோயினால் 317பேர் இறந்துள்ளனர்.

## இந்திய நேசக்கரத்திற்கு வெகுவிரைவில் பதில்

### பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி

(இஸ்லாமாபாத்)

ஜம்மு-காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண நேசக்கரம் மூலம் நீட்டுவதாக பிரதமர் வாஜ்பாய் சமீபத்தில் அறிவித்த அமைதி முயற்சிக்குத் தாம் இன்னும் சில நாட்களில் பதிலளிக்கப் போவதாக பாகிஸ்தான் பிரதமர் ஜவருல்கான் ஜமாலி கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது குறித்த விடயங்களை குறிப்பிட மறுத்துவிட்டார்.

எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணலாம் என்ற நிலைப்பாட்டை பாகிஸ்தான் கொண்டுள்ளது. என்றும் அவர் அப்போது கூறியுள்ளார்.

## கியூபா சிறைகளில் வாடும் உறவுகளை மீட்கப் போராட்டம்

(கவானா)

கியூபா நாட்டில் போலியான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள தங்கள் உறவினர்களை விடுதலை செய்ய வேண்டி கவானா நகரிலுள்ள தேவாலயத்தில் சிறப்புப் பிரார்த்தனையும் அமைதிப் பேரணியும் நடத்தப்பட்டுள்ளது.

கியூபா நாட்டில் அதிபர் பிடல் காஸ்ரோவுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுபவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் போலியான குற்றச்சாட்டின் பெயரில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

பலருக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.



பாக்தாத்துக்கு செல்லுமுன் ஜோர்தானின் தலைநகர் அம்மானில் 150ஆயிரம் டினார்களை 100 டொலருக்கு வாங்கும் வெளிநாட்டவர் ஒருவர்

## காங்கிரஸ் வசமுள்ள வட மாநிலங்களை கைப்பற்ற பா.ஜ.கட்சி வியூகம்!

### -உரிய காலத்திற்கு முன்பே பிரச்சார நடவடிக்கை

(புதுடில்லி)

ராஜஸ்தான் உள்ளிட்ட வட மாநில சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை தோல்வியடையச் செய்து பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியைப் பிடிக்கும் என துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

விரைவில் நடைபெறவுள்ள வடமாநில சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு ராஜஸ்தானில் பிரச்சாரத்தைத் தொடங்கிய அவர் மத்தியில் பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வரும் என்றார்.

ராஜஸ்தான், டில்லி,மத்தியில் பிரதேசம் ஆகிய வடமாநிலங்களில் விரைவில் சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இங்கு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற பா.ஜ.கட்சி தீவிரமாக முயற்சி செய்து வருகின்றது.

இதன் முன்னோடியாக தேர்தல ஏற்பாடுகள் தொடங்கும் முன்பாகவே, பா.ஜ.க.ராஜஸ்தான் மாநிலத்தில் பிரச்சாரத்தைத் தொடங்கிவிட்டது.

ராஜஸ்தான் மாநிலத்தில் சர் விஜா எனும் இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்ட அத்வானி, "பரிவர்த்தன்யாத்திரை" எனும் தேர்தல் பிரச்சாரத்தை நேற்று முன்தினம் தொடங்கிவைத்துள்ளார்.

## படை அதிகாரிகள் சந்திப்பு!

இந்திய-பங்களாதேஷ் எல்லைப் பாதுகாப்புப் படைத்தலைவர்கள நேற்று டாக்காவில் சந்தித்துப் பேசியுள்ளார்கள்.

எல்லையில் பதற்றத்தை ஏற்படுத்தும் எல்லைக்கப்பாலுள்ள பிரசசினைகளைதீர்க்க இந்தச் சந்திப்பு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

எல்லைப்பாதுகாப்புப்படையின் தலைமை இயக்குனர் அஜித் சர்மா தலைமையில் இந்தியக் குழுவும் பங்களாதேஷ் குழுவுக்கு மொகமட் ஜகாங்கீரும் தலைமை தாங்கினர்.



அழிக்கப்பட்ட ஆயுதங்களைக் கடந்து செல்லும் ஈராக்கியர் ஒருவரும் கைவிடப்பட்ட நாய்களும்








தளபதிகள் கொடிவணக்கம்



கரும்புலிகளின் நினைவுக்கல்லை கரும்புலிகளின் தந்தையர்கள் திரைநீக்கம் செய்கின்றனர்



கரும்புலிகளின் நினைவுக்கல்லுக்கு கரும்புலியின் தந்தை மலர்மாலை அணிவிக்கின்றார்.



கரும்புலிகளின் நினைவாக கரும்புலியின் தந்தை மரம் நாட்டுகின்றார்.



அனைத்து மாவீரர்களின் நினைவுத்தூபிக்கு தளபதிகள் மலர்மாலை அணிவிக்கின்றனர்.


## ஆயுதக் கண்காட்சி

(படங்கள்: லோகீசன்)















## ஆனையிறவுப் பெருந்தளத்தை

# சிறிலங்கா பாதுகாத்த அதேவழியில் நாம் அதனை நிர்மூலம் செய்தோம்

### கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

நீண்டகாலமாக அன்னிய ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்து வந்த ஆனையிறவு வெற்றித் தளத்தை தகர்க்கின்ற நோக்கோடு 1991 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலி களின் அனைத்துப் படையணிகளும் ஒன்று சேர்ந்து ஒரு பாரிய தாக்குதலை மேற்கொண்ட வேளையில் அந்தத் தாக்குதல் முயற்சி சிறிலங்கா கடற்படை வெற்றிலைக்கேணியில் தரையிறக்கம் ஒன்றை மேற்கொண்டு அதற் கூடாக எங்களினுடைய இராணுவ பலத்தை உடைத்து அந்த ஆனையிறவை தக்கவைத்துக்கொண்டன .

அதேபோன்று தான் மீண்டும் அதே ஆனையிறவை வெற்றிகொள்ளுகின்ற முகமாக இரண்டாயிரமாம் ஆண்டு வெற்றிலைக்கேணியில் இருந்து குடாரப்புக்கு ஒரு தரையிறக்கம் ஒன்றை மேற்கொண்ட வேளையில் சிறிலங்கா கடற்படை தன்னுடைய முழுவளத்தையும் பயன்படுத்தி அந்த முயற்சியை முறியடிக்கின்ற நோக்கத்தோடு முழுத்தாக்குதலில் ஈடுபட்டது.

ஆனால், அன்று மேற்கொள்ளப்பட்ட எங்களினுடைய தரையிறக்க நிகழ்வை சிறிலங்கா கடற்படையால் தடுத்து நிறுத்த முடியவில்லை அந்த தரையிறக்க நிகழ்வு ஆனையிறவை வெற்றிக்கு வழிகோலிவைத்தது. இவ்வாறு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தெரிவித்தார்.

வெற்றிவிழா நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்:

அதேபோன்றுதான் ஆனையிறவை இழந்த சிறிலங்கா இராணுவம் மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பல நாட்டில் இருந்தும்பெறப்பட்ட இராணுவ ரீதியான ஆயுத வளங்களையும், விமானப் படையினுடைய வளத்தையும் இராணுவ ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு ஒரு பாரிய படையெடுப்பை 'தீச்சுவாலை' என்ற பெயரில் மேற்கொண்டது.

அந்த 'தீச்சுவாலை நடவடிக்கையையும் மிகவும் மூர்க்கத்தனமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தரைப்படையணிகள் ஒன்று சேர்ந்து தாக்குதலைத் தொடுத்து இராணுவத்தினுடைய முதுகெலும்பையும் உடைத்தெறிந்தன.

இவை எங்களினுடைய தலைவரின் தீர்க்க தரிசனம் கொண்ட ஒரு பார்வை. ஏனென்று சொன்னால் 1991 ஆம் ஆண்டு ஆனையிறவை வீழ்த்த முடியாத போது வீழ்த்த முடியாத தற்கான காரணத்தை கண்டுபிடித்து அன்று விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் என்ற ஒரு அணியை மறுசீரமைத்து கடற்புலிகளாக விடுதலைப் புலிகளின் கடற்படையாக உருவாக்கி வைத்தமையால்த்தான் ஆனையிறவை தக்கவைப்பதற்காக வெற்றிலைக் கேணியில் விமானப்படையும், சிறிலங்கா கடற்படையும் துணை கொண்டு தரையிறக்கம் செய்த அதேபாணியைப் பயன்படுத்தி மீண்டும் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் நாங்கள் ஒரு தரையிறக்கத்தை மேற்கொண்டு ஒரு பாரிய படையணியாக வளரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியது.

இன்று பதினொரு ஆண்டு கடந்து தமிழீழத்தினுடைய கடற்படையாக வலம் வந்த கடற்புலிகளை தெற்கிலுள்ள அரசாங்கமும்; சிறிலங்கா கடற்படைத்தளபதியும் கடற்படையாக அங்கீகரிப்பதற்கு மிகவும் பின்னடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், கடற்படையாக அங்கீகரிப்பதற்கு, கடற்படையாக ஏற்றுக் கொள்வதற்கு இன்று இந்த சர்வதேச மத்தியஸ்தத்தில் ஈடுபடுகின்ற நாடுகள் ஏற்றுக் கொண்டாலும் சிறிலங்கா அரசும், சிறிலங்கா அரச படைகளும் ஏற்றுக் கொள்வதற்கு பின்னடிப்புச் செய்கின்றார்கள்.

உங்களுக்குத் தெரியும். இரண்டாயிரமாம் ஆண்டு ஆயிரத்து இருநூறு போராளிகளையும் அதற்குரிய தளபாடங்களையும் சிறிலங்கா கடற்படையினுடைய ஒட்டுமொத்த கடற்கலங்களும் கடலில் தடுத்து நின்றபோது அனைத்து எதிர்ப்பையும் முறியடித்து அவ்வளவு படையணிகளையும் கொண்டுவந்து ஒரு பாரிய தரையிறக்கம் மேற்கொள்ளப்பட்டது.



அதைத் தடுத்து நிறுத்துவதற்கோ அதை முறியடிப்பதற்கோ சிறிலங்கா கடற்படையால்அந்தவேளை முடியவில்லை.

அதுமட்டுமல்ல, யாழ்ப்பாணத்திற்கான தரை வழிப்பாதை ஒன்றை எதிர்பார்த்து ஜெயசிக்குறு சமர் ரத்வத்தையினால் முன்னெடுக்கப்பட்ட போது இந்தச் சமரை முறியடிப்ப தற்காக கிழக்கிலங்கையில் இருந்து மூவாயிரத்துக்கும் மேற்பட்ட எங்களுடைய போராளிகள் கொண்டு வரப்பட்டனர். இவர்கள் சிறிலங்கா கடற்படையின் கடற்படைத்தளத்தின் இரண்டாவது பெரிய கடற்படைத்தளமாக விளங்கிய திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு அருகாமையில் இருந்து தான் கொண்டு வரப்பட்டவர்கள்.

இந்தவகையில் ஜெயசிக்குறு சமருக்காக கொண்டுவரப்பட்டவர்களைக் கூட தடுத்து நிறுத்துவதற்கு சிறிலங்கா கடற்படையால் முடியவில்லை. அதுமட்டுமல்ல, யாழ்ப்பாணத்திற்கான விநியோகப்பணி ஆரம்பத்தில் கரையில் இருந்து இருபது கிலோமீற்றர் தூரத்துக்கு உள்ளாகத்தான் (திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்குமான) நடந்து வந்தது. தொடர்ந்து நடந்து வந்த கடல் மோதல்களை அடுத்து சிறிலங்கா கடற்படை தன்னுடைய விநியோகப் பணியினுடைய பாதையைத் தரையில் இருந்து - முல்லைத்தீவு கரையில் இருந்து நூறு கிலோமீற்றருக்கு அப்பால் மாற்றிக்கொண்டது.

அது மட்டுமல்லாமல் தங்களினுடைய போக்குவரத்து நேரத்தை - எங்களினுடைய கட்டுப்பாட்டில் இருந்த வெற்றிலைக்கேணி தொடக்கம் நாயாறு' வரைக்குமான பகுதியை கடக்கின்ற நேரத்தைக்கூட சிறிலங்கா விமானப்படைக்கு ஏற்புடைய நேரமாகவும் வைத்துக்கொண்டுதான் மேற்கொண்டது. அதாவது காங்கேசன்துறையிலும் திருகோண மலையிலும் விமானப்படை தயார்நிலையில் இருக்கின்ற வேளையில் பட்டப்பகலில் நூறு கிலோமீற்றர் தூரத்தால் இந்த விநியோகப் பணி நடந்தது.

அதைக்கூட அந்தப் பட்டப்பகலில் கூட சிறிலங்கா கடற்படைக்கு எதிராக பல சமராடி இருக்கின்றோம். ஆனால் இதை எல்லாம் தற்போது ஆட்சியில் இருக்கின்ற, ஏற்கெனவே ஆட்சியில் இருந்த அத்தனை அரசியல்வாதிகளுக்கும் தற்பொழுது கடற்படை தளபதியாக இருக்கின்ற தயா சந்தகிரிக்கும் தெரியும். தெரிந்து கொண்டும் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளை தமிழீழத்தினுடைய கடற்படையாக அங்கீகரிப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் அவர்களுக்கு கஸ்ரமாக இருக்கின்றது.

எங்களுடைய சொந்தக் காலில் நாங்கள் நின்று போராடவேண்டுமாக இருந்தால் சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் கப்பல்கள் உலாவரவேண்டும் என்ற நோக்கத்தோடு 1984 ஆம் ஆண்டு எமது தேசியத் தலைவர் அவர்கள் 'சோழன்' என்ற கப்பலை சர்வதேச கடற்பரப்பில் ஓடவிட்டதன் மூலம் இந்த கடலுக்கான வழியைத் திறந்துவிட்டார்.

சர்வதேச கடற்பரப்பில் 11கடற்புலிகள் திட்டமிட்ட முறையில் சிறிலங்கா கடற்படையினரால் அழிக்கப்பட்டார்கள் அதுமட்டுமல்ல நெடுந்தீவு கடற்பரப்பில் மூன்று கடற்புலிகள் அழிக்கப்பட்டார்கள்

போர் நடந்து கொண்டிருந்த வேளையில் போருக்கு முகம் கொடுக்க முடியாத சிறிலங்கா கடற்படை இந்த போர்நிறுத்த காலத்தில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட காலத்தில் 14 கடற்புலிகளை கடற்பரப்பில் கொன்று அழித்துள்ளது. ஆனால் உங்களுக்காக நாங்கள் கைகளைக் கட்டிக் கொண்டிருக்கின்றோம் என்றார்.

# எமது விடுதலைப் போராட்டத்தின் நிமிர்வை உலகிற்கு கட்டியம் கூறிய நிகழ்வு

### வெற்றிவிழா நிகழ்வில் மூத்த தளபதி பொட்டம்மான்

இந்த வெற்றி நிகழ்விற்குக் காரணமான எமது விடுதலைப் போராட்டத்தின் திருப்பமாக அமைந்த ஆனையிறவுப் பெரும் சமரின் வெற்றி. அதைத் தொடர்ந்து அதை மீட்பதற்கு எதிரி எடுத்த முயற்சியின் தோல்வியாக அமைந்த தீச்சுவாலை முறியடிப்புச் சமரின் வெற்றி ஆகியவை எமது இனத்தின் உயர்வை, எமது விடுதலைப்போராட்டத்தின் நிமிர்வை உலகெங்கும் கட்டியம் கூறிய நிகழ்வுகளாக அமைந்தது.

இவ்வாறு நேற்றைய வெற்றிவிழாவின் காலை நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய மூத்த தளபதி பொட்டம்மான் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்; அந்த வெற்றியின் விளைவாக நாம் இந்த மண்ணிலே நிமிர்ந்து நிற்கின்றோம் இந்த மண்ணிலே மட்டுமல்ல உலக அரங்கிலே இன்று பேச்சு வார்த்தை மேசைகளாக இருக்கட்டும் மற்றும் தமிழினம் வாழும் நிலங்களாக இருக்கட்டும் எமது இனம் மதிக்கப்படுகின்றசூழலை ஏற்படுத்தித் தந்த நிகழ்வாக இந்த வெற்றி நிகழ்வை நாம் கொள்ளலாம்.

அந்த வெற்றி நிகழ்வின் நாயகர்களான எமது மாவீரர்களை நாம் இன்று போற்றுகின்றோம்.

இந்த ஆனையிறவுப் பெரும் தளத்தை விழ்த்துவதற்கு நாம் ஒரு தசாப்தத்திற்கு முன்னதாக ஓர் முயற்சியை மேற்கொண்டோம் அந்த பெரிய நடவடிக்கையானது நாம் முழுமையான வெற்றிபெற முடியாததாக - எமது இலக்கை வென்றெடுக்க முடியாத ஒன்றாக எமக்கு அமைந்திருந்தது. அந்த வேளையிலே இதற்கான காரணங்களை எமது தலைவர் ஆராய்ந்தார். அந்த வெற்றி பெறமுடியாத எமது நடவடிக்கையைத் தொடர்ந்த நாட்களிலே தலைவர் அவர்கள் ஒரு தீவிரமான சிந்தனையுடன் தமது வழமையான பணிகளில் இருந்துகூட ஒதுங்கிக் கொண்டவராக திவிரமாக சிந்தனை வயப்பட்டவராக நீண்ட நாட்களைக் கழித்தார். அதனைத் தொடர்ந்து அவருடைய இராணுவ நடவடிக்கைகளிலே அல்லது இராணுவச் சிந்தனைகளிலே பல்வேறு மாற்றங்களைக் காலத்திற்குக் காலம் புகுத்தினார்.

எமது இராணுவக் கட்டமைப்பு பல்வேறு மாற்றங்களைப் படிப்படியாகப் பெற்று வந்தது. அதன் தொடர்ச்சியாக நடந்த நடவடிக்கையில் இந்த ஆனையிறவு எம்மிடம் வீழ்ந்தது.

அந்த ஆனையிறவு முகாமானது இரண்டு அல்லது மூன்று சதுரமைல்கள் கொண்ட ஒரு முகாமாக ஆயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்ட ஒரு முகாமாகவே அமைந்திருந்தது.அதன் பின்பு ஏற்பட்ட போரியல் மாற்றங்களால் இதே ஆனையிறவுப் பெருந்தளமானது விரிவடைந்து நன்கு பெருத்து 80 சதுர மைல்களுக்குக் குறையாத விஸ்தீரணம் கொண்டதாகவும் நாற்பதாயிரம் பெரும் படையினரைக் கொண்ட மிகப் பெரிய ஒரு தளமாக - கூறப்போனால் ஆசியக் கண்டத்திலே இருக்கக்கூடிய பெரும் இராணுவத் தளமாகவும் அது விரிவு பெற்றிருந்தது. அன்று ஆயிரம் பேர் கொண்ட இராணுவத்தளத்தை இரண்டு சதுர மைல் கொண்ட இராணுவ முகாமை அன்று வெல்ல முடியாமற்போனோம்.



அதே இராணுவத் தளமானது எண்பது சதுர மைல்களையும் நாற்பதாயிரம் படையினரையும் கொண்டதாக விரிவடைந்திருந்தபோது நாம் இதனை வென்றோம்.

இந்த வெற்றிகளிற்கு இடையிலே எம்மை வளர்த்துவிட்ட காரணிகளை இந்த ஆக்கிரமிப்பாளர்கள் புரிந்து கொள்வார்களா? அன்று நாம் அந்த சிறிய இராணுவ முகாமை வெல்ல முடியாது இருந்தவர்கள். குறைந்தளவு படையினரைக் கொண்ட இராணுவ முகாமை வெல்ல முடியாது இருந்த வேளையில் நாம் இருந்ததற்கும் அதன் பின்னர் மிகப் பெரிய இராணுவத்தளத்தை நாம் வெற்றி கொள்வதற்காக இருந்த சூழலுக்கும் இடையிலான மாற்றத்திற்குக் காரணம் யாது? எமது தலைவர் அவர்களது இராணுவ ரீதியான சிந்தனை, நெறிப்படுத்தல் மற்றும் அது தொடர்பான விடயங்கள் ஒருபுறம் இருக்க, இந்த ஆக்கிரமிப்பாளர்கள் எம்மீது சுமத்திய தடைகள், எமக்குத் தந்த நெருக்கடிகள், எமது விடுதலைப் போராட்டத்தைப் புரிந்து கொள்ள மறுத்தமை இவைதான் ஒரு பெருந்தளத்தை வெற்றிகொள்வதற்குத் தலைவர் அவர்களது முயற்சிக்குப் பின்னால் இருந்த எதிரியின் அம்சங்கள். இன்னும் கூட நாம் ஒரு வலுமிக்க சக்தியாக இருக்கின்றோம் என்றால் இன்னும் எமது தியாகங்களை - எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மையை ஆக்கிரமிப்பாளர்கள் புரிந்து கொள்ளத்தவறுகின்ற நிலைமையும், எதிர்காலத்தில் எம்மை என்ன நிலைக்கு இட்டுச் செல்லும், எவ்வகையான வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்பதை ஆக்கிரமிப்பாளர்கள் மனங்கொள்வார்கள், மனங்கொள்ள வேண்டும் என நாம் இந்த வேளையில் நினைக்கலாம். எவை எப்படியிருப்பினும், எமது தலைவர் அவர்களது சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுப்பவர்களாக எமது போராளிகளும், அந்த போராளிகளினதும் தலைவர் அவர்களினதும் உயர்ச்சிக்கு உறுதுணை வழங்குபவர்களாக எமக்கு தமிழீழ மக்களுமே நின்றுள்ளார்கள். அவர்களது வியர்வையும், கண்ணீரும் போராளிகள் சிந்திய இரத்தமும் எம்மைப் பலப்படுத்தியுள்ளது. அவர்களது அந்த உணர்வுகள் எம்பின்னால் இருக்குமானால் எந்தச் சக்தியை வெல்வதற்குரிய மனோபலமும் மற்றும் அனைத்துப் பலங்களும் எம்முடன் இணையும் என்பது திண்ணம். அந்த உறுதியை இந்த வெற்றிவிழா எமக்குத்தர வேண்டும் என்றார்.

# கரும்புலிகளின் நினைவுக்கல் வெற்றி விழாவில் திரை நீக்கம்

(அலுவலக செய்தியாளர்)

ஆனையிறவுப் பெருந்தள அழிப்பின் மூன்றாம் ஆண்டு வெற்றி விழாவும், தீச்சுவாலை முறியடிப்புச் சமரின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும் நேற்றுக் காலை பளைப் பகுதியில் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் கரும்புலிகளின் நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தமிழீழ அரசியல்துறையின் மகளிர் பொறுப்பாளர் தமிழினி தலைமையில் காலை 10 மணியளவில் காலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை மூத்த தளபதி கேணல் பானு அவர்கள் ஏற்றி வைத்தார். அடுத்து படையணிகளுக்கான கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டன.

பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவின் கொடியினை தளபதி உமையாள் ஏற்றி வைத்தார். மாலதி படையணியின் கொடியினை மாலதி படையணியின் தளபதி தமிழ்ச்செல்வி ஏற்றி வைத்தார். சிறுத்தைப் படையணியின் கொடி (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ போக்குவரவுக்கழக வைகாசி மாதத்திற்கான பருவகாலச் சீட்டு வழங்கல்

தமிழீழ போக்குவரவுக்கழகத்தினால் வழங்கப்படும் பருவகாலச்சீட்டு பின்வரும் தினங்களில் வழங்கப்படும்.

| | |
|---|---|
| **பேருந்து நிலையம்,முல்லைத்தீவு** | **- 28,29,30ம் நாள்** |
| **தமிழீழ போக்குவரவுக் கழகம், புதுக்குடியிருப்பு** | **- 28,29,30ம் நாள்** |
| **மகா வித்தியாலயம், பூநகரி** | **- 28,29,30ம் நாள்** |
| **தமிழீழ போக்குவரவுக்கழகம், கிளிநொச்சி** | **- 28,29,30ம் நாள்** |
| **பேருந்து நிலையம், முகமாலை** | **- 28,29,30ம் நாள்** |

பாடசாலை மாணவருக்கு 05.05.2003, 06.05.2003 நாட்களில் கல்விகற்கும் பாடசாலைகளில் பருவகாலச்சீட்டு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முகாமையாளர்,**
**தமிழீழ போக்குவரவுக்கழகம்,**
**நடுவப்பணிமனை,**
**விசுவமடு.**

(சி-7739)

# பாதிப்புற்றோருக்கு பொருள் வழங்கல்

கண்டாவளைப் பிரதேச செயலர் பணிமனையில் கடந்த வியாழன்று புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் தெய்வக் குழந்தைகள் இல்லத்தின் மூலம்கண்டாவளைப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடுப்புப் பார்சல் வழங்கும் வைபவம் மு.ப. 11.30 மணிக்கு பிரதேச செயலர் பி.கா. மத்தியாஸ் தலைமையில் நடைபெற்றது.

இப்பார்சல்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக கணவனை இழந்தவர்கள், குடும்பத்தலைவன் காணாமல்போனவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், அனாதைப் பிள்ளைகள், வலுவிழந்தோர், மன நோயாளிகள், வறுமையிலும் வறுமையானவர்கள், மிதிவெடிகளால் ஊனமுற்றோர்கள் என 09 கிராம சேவகர்கள் பிரிவைச் சேர்ந்த மொத்தம் 220 பேருக்கு வழங்கப்பட்டன. (14)

# சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களின் அனுசரணை

ஆனையிறவு வெற்றியின் 3 ஆவது ஆண்டு நிறைவாகவும், தீச்சுவாலை முறியடிப்புச் சமரின் 2 ஆவது ஆண்டு நிறைவாகவும் தமிழீழ விளையாட்டுத் துறையால் 27.04.2003 அன்று நடாத்தப்பட்ட மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்குரிய பரிசிற்கான அனுசரணை வழங்கிய,

**1. சிவா ரேடிங் கொம்பனி யாழ்.சாலை, கிளிநொச்சி.**

**2.தாசன் போட்டோ அன்வீடியோ இராமநாதபுரம், வட்டக்கச்சி**

**3. கோபாலசிங்கம் கரும்புத்தோட்ட உரிமையாளர், ஸ்கந்தபுரம்**

ஆகிய தொழிலதிபர்களுக்கு தமிழீழ விளை யாட்டுத் துறையினர் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

(சி-7860)

# Vanni Institute of Technology - வன்னி ரெக்

அமெரிக்கா, சிலிக்கன் வலியில் தலைமைச் செயலகத்தைக் கொண்ட, அரசசார்பற்ற சர்வதேச நிறுவனமான international Tamil Technical Professionals Organization - ITTPO, வடகிழக்கில் வாழும் மக்களுக்காக ஒரு உயர் தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளது. அந்நிறுவனத்தின் திட்டத்தின்படி ஆரம்பத்தில் கிளிநொச்சி நகரில்ஒரு தற்காலிக வளாகம் ஒன்றில் இது அமைக்கப்படவுள்ளது. இப்பாடசாலை பல்கலைக்கழக/ தொழிற்சாலை ரக போதனைகளை மேற்கொள்ளவுள்ளது. உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களினதும் அவர்களின் நண்பர்களினதும் திறமைகளும், ஆற்றல்களும் இப்பாடசாலையூடாக வடகிழக்கு மக்களிற்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

**பின்வரும் போதனைப் பகுதிகள் இங்கு வழங்கப்படவுள்ளன.**

1. Database Application Development 2. Web Based Application Development
3.Computer Networking and Communications 4. Electronics.

தூர இடத்தில் இருந்து வரும் மாணவர்களுக்கான தங்குமிடவசதிகளைக் கொண்ட வளாகத்தில் இப்பாடசாலை மே மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந் நிறுவனம் தமது மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் முயற்சிகளிலும் தீவிரமாக ஈடுபடும் 60 மாணவர்களுக்கு முதல் பிரிவில் இடம்கொடுக்கப்பட்டு போதனைகள் ஆங்கிலத்தில் 9மாதங்கள் நடைபெறும். தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 2வருடங்கள் நிறுவனத்தின் கீழ் வேலைசெய்யும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். பல்கலைக்கழக பட்டதாரிகள், கணினியில் ஏற்கனவே அனுபவமுள்ளவர்கள், விஞ்ஞானம்,கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் ஆர்வம் கொண்டவர்கள், கணினித்துறையில் தொழில் புரிய விரும்புபவர்கள் ஆகியோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித்தகைமைகளைக் கொண்டவர்களாக இருத்தல்வேண்டும்.

1. கணிதம்,விஞ்ஞானம், வணிகம் சம்பந்தமான நெறியில் பல்கலைக்கழகப்பட்டப்படிப்பு.

அல்லது

2. க.பொ.த (உ/த)இல் மூன்று பாடங்களில் சித்தியும், க.பொ.த.(சா/த) இல் ஆங்கிலத்தில் சாதாரணசித்தியும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சிறப்புச் சித்தியும் (போரினால் இடம்பெயர்ந்து உ/த பரீட்சைக்கு தோற்றாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.)

தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பரீட்சை ஒன்றிலும் நேர்முகப்பரீட்சை ஒன்றிலும் தோற்றவேண்டும்.

இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்வதற்கான (09மாதம்) கட்டணமாக ரூபா 7500.00 அறவிடப்படும் (பகுதிக் கட்டணமாகச் செலுத்தலாம்.) சில தகுதிபெறும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களும், கடனுதவிகளும் வழங்கப்படும். இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ் வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Office of Admission.
Vanni Institute of Technology, Kilinochchi.

பின்வரும் தொழில்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Registrar, Accountant,**
**Lecturers: Software, Hardware, Networking, English**

விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

**Employment Application, Vanni Institute of Technology, Kilinochchi.**

## Vanni Tech Student Admission Application Form-2003

01. Name:........................................ 02. Father 's Name:........................................
03. Mailing Address:........................................
04. Permanent Address:........................................
05. Date Of Birth:........................................ 06. Gender:........................................
07. Academic Qualifications:
Provide Photocopies Of all certificates and related documents. For university study list subjects (including Lab work), grades and honors for each year.

| Examinations/Programs | Name Of institution | Name Of Degree/ Certification | Start, End Dates | Subjects | Grades |
|---|---|---|---|---|---|
| University (Program Of study) | | | | | |
| All Other Programs (List individually) | | | | | |
| G.C.E A/L | | | | | |
| G.C.E O/L | | | | | |

08. Work Experience (list All experiences related to Business, Industrial and Teaching)

| Position at Employment | Responsibilities & Accomplishments | Name Of Institution | start, End Dates |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

09.Other Skills
(Describe inDetail : All activities relating to Management, Leadership, Public-Service.School- Prefect. Team captain.other Technical expertise etc.)

10. To the best Of my Knowledge all information Provided above are true, and I understand any misrepresentation of information or furnishing of false documents Will disqualify my opportunity to be selected as a student. If it is discovered during my studies that I have willfully provided incorrect information, I will be expelled from the Institute, and if discovered after my studies, my certification will be revoked.

Signature........................ Date ...........

www.ITTPO.org
VanniTech@ITTPO.org
VanniTech is an equal opportunity institution.
ITTPO is a registered non-profit organization in the U.S.A. and a government approved NGO in sri Lanka.

(3769)

Vanni Tech
Vanni Institute of Technology

## சிந்தனைக்கு

போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 29-04-2003

## தவறான விளக்கம்!

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் இருந்து முற்றாக விலகவில்லை. பேச்சுவார்தையில் கலந்து கொள்வதை இடைநிறுத்தியமையானது, யுத்தநிறுத்த உடன்பாட்டை அரசாங்கம் அமுல் செய்வதற்கென வழங்கப்பட்ட காலஅவகாசமே என்ற விடுதலைப்புலிகளின் அண்மைய அறிவிப்புக்கள் அமெரிக்கா அச்சுறுத்தியதன் காரணத்தினால் விடுதலைப்புலிகள் இறங்கிவந்த தன்விளைவே எனச் சில ஊடகங்களும், சிலவிமர்சகர்களும் கூறிக் கொள்கின்றனர். ஆனால், இது புலிகளின் அறிவிப்புகளைச் சரியாக விளங்கிக் கொள்ளாததன் விளைவே ஆகும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் அடுத்த கட்டத்தாய்லாந்துப் பேச்சுவார்த்தையிலும், ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலும் தாம் கலந்து கொள்வதை இடைநிறுத்தியுள்ளதாகவே புலிகளின் ஆலோசகரும், புலிகளின் தரப்புத் தலைமைப்பேச்சாளருமான அன்ரன்பாலசிங்கம் அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இக்கடிதத்தில் விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து முற்றாக விலகுவதாகவோ, யுத்தத்தை ஆரம்பிக்கப் போவதாகவோ எதனையும் குறிப்பிடவில்லை. அரசாங்கம் - புலிகள் பேச்சுவார்த்தையின் போது காணப்பட்ட இணக்கப்பாடுகள், உடன்பாடுகள் என்பன நிறைவேற்றப்படவேண்டும் என்ற அர்த்தப்பாடுடனேயே கடிதம் அமைந்திருந்தது.

ஆனால் இதனை விளங்கிக் கொண்டோஅன்றிவிளங்கிக் கொள்ளாமலோ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் இருந்து விலக்கிக்கொள்வதாகவும் யுத்தம் விரைவில் ஏற்படலாம் என்றும், கொழும்புப்பத்திரிகைகள் சில பரபரப்பாகத் தகவல்களை வெளியிட்டு வந்தன. இதற்கு எதிர்க்கட்சிகள் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறிவிட்டனர். விரைவில் யுத்தம் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என விடுத்த அறிவிப்புகளும் காரணமாக இருக்கலாம்.

இந்தவகையில், சிறிலங்காவிற்கான அமெரிக்கத்தூதுவர் கூட புலிகளின் நிலைப்பாட்டைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்றே கூறலாம். இதன்காரணமாகவே அமெரிக்கத்தூதுவர் விடுதலைப்புலிகள் உடனடியாகப் பேச்சுவார்த்தைக்குச் செல்லவேண்டும் என்ற தொனியில் பேசியிருந்தார். மாறாக, அமெரிக்கத்தூதுவர் புலிகளின் கூற்றுக்களை சரியாகவிளங்கிக் கொண்டு புலிகள் பேச்சுவார்த்தைக்குச் செல்லவேண்டும் எனக் கூறியிருப்பினும் கூட புலிகள் இதனால் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டதாகவில்லை.

ஏனெனில், அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்லின் அறிவிப்பை அடுத்து விடுதலைப்புலிகள் எந்தவித மாற்றத்தையும் செய்ததாக எமக்குத் தெரியவில்லை. ஏனெனில் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை எவ்வேளையிலும், எச்சந்தர்ப்பத்திலும் பேச்சுவார்த்தையில் இருந்து விலகுவதாகவோ அன்றி யுத்தத்தை தொடங்கப் போவதாகவோ பேச்சிற்குத் தானும் கூறிக்கொள்ளவில்லை மாறாகச் சமாதான முயற்சிகளுக்கான ஒத்துழைப்பையே வழங்கிவருகின்றனர்.

ஆகையினால், விடுதலைப்புலிகள் இறங்கிவந்துள்ளனர் எனில், அவர்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதை, இடைநிறுத்தியுள்ளதாகச் செய்திருந்த அறிவிப்பைக் கைவிட்டிருந்தல் வேண்டும். அதாவது 7ஆவது சுற்றுப்பேச்சிற்கு தாய்லாந்து செல்வதற்கும், யூனில் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ள ஜப்பான் செல்வதற்கு அவர்கள் தயார் என இதுவரையில் அறிவிப்புச் செய்திருத்தல் வேண்டும்.

ஆனால், விடுதலைப்புலிகள் தற்பொழுதும் தமது அரசியல் ஆலோசகரும் புலிகளின் தரப்பில் பேச்சுவார்த்தைக்குழுவிற்குத் தலைமைதாங்குபவருமான அன்ரன்பாலசிங்கம் அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதிய கடிதத்திற்கான பதிலையே எதிர்பார்த்துள்ளனர். இதனைத் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும் 'சண்டேலீடர்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் உறுதி செய்துள்ளார்.

இது மாத்திரமல்ல, அமெரிக்கா ஏற்கனவே முன்வைத்த சில நிபந்தனைகளை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அதாவது விடுதலைப்புலிகள் ஆயுதப்போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்ற அமெரிக்காவின் வற்புறுத்தல்களைப் புலிகள் இயக்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல. அது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியப்பாடற்றதொன்று என்றும் உறுதிபடத்தெரிவித்து விட்டனர்.

இந்நிலையில், விடுதலைப்புலிகள் அமெரிக்காவின் எச்சரிக்கைக்குப் பணிந்துவிட்டார்கள்/இறங்கி வந்துவிட்டார்கள் எனக்கூறுவதும், திருப்திப்பட்டுக்கொள்வதும் எந்தவித பயனையும் கொடுக்கவல்லதல்ல. இலங்கையில் சமாதானம் நிலைபெற சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின்உரிமைகளை அங்கிகரிப்பதே பொருத்தப்பாடன வழிமுறையாக இருக்கமுடியும், அவ்வாறு இல்லாது விடில் இனப்பிரச்சினைக்கு யார்விரும்பினாலும் விரும்பாதுபோனாலும் தீர்வொன்று ஏற்பட்டுவிடும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

# தமிழர்கள் ஒன்றுபட்டு நிற்பதை மாற்றிவிட அனுமதிக்க முடியாது!

## - திருமலை மாவட்ட பா.உ.இரா. சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் மட்டுமே பேசவேண்டும். புலிகளை இலகுவில் ஏமாற்றிவிட முடியாது. தமிழர்கள் ஒன்றுபட்டு நிற்பதைப் பார்த்து சிங்களவர்கள் அஞ்சுகின்றார்கள். இந்த நிலையை மாற்றிவிட அனுமதிக்க முடியாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரும் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பாராளுமன்றத்துக்கான தேர்தல் எந்த வேளையிலும் வரக்கூடிய நிலையே காணப்படுகின்றது. எனவே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் அடுத்த மாதம் 15ஆம் திகதி அளவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடவுள்ளன. இன்று இருக்கின்ற அரசியல் நிலையில் சனாதிபதி சந்திரிகா எந்த வேளையிலும் பொதுத் தேர்தலை அறிவிக்கலாம். இதைவிட உள்ளூராட்சித் தேர்தலுக்கும் புதிதாக நியமனப்பத்திரம் கோரப்படவுள்ளது. இந்நிலையில் கூட்டணியினராகிய நாம் எமக்குள் ஒற்றுமையையும் பலத்தையும் அதிகரிக்க வேண்டும்.

யுத்தம் இனியும் எமக்கு வேண்டாம் சமாதானமே எமக்கு முக்கியம் இன்றைய காலகட்டத்தில் விடுதலைப்புலிகள் எமது மக்களின் நலன் கருதி மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும். புலிகளைப் பேச்சு மேசைக்கு கொண்டுவருவதற்கான முயற்சியில் அரசு தளராது ஈடுபட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பத்திரிகைகளில் வெளிவந்த செய்திக்கு சிறிலங்கா அரசு முற்றாக மறுப்பு!

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யவேண்டும் என்ற வகையில் படைத் தளபதிகள் பிரேரணையொன்றை முன்வைத்துள்ளார்கள் என்று பத்திரிகைகளில் வெளியான செய்தியை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளது.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கருத்து வெளியிடுகையில்; ஆயுதப்படைத்தளபதிகள் இத்தகைய பிரேரணை எதனையும் தமக்குத் தெரிவிக்கவில்லை என்று கூறினார்.

இவ்வாறான பிரேரணையை அவர்கள் சனாதிபதிக்கு சமர்ப்பித்திருந்தால் அது பற்றி தமக்கும் அறிவித்திருக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதுடன் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக ஆயுதப் படைத்தளபதிகளுடன் ஒழுங்கான தொடர்புகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

# மட்டு. ஆதார வைத்தியசாலை நுழைவாயில் அசுத்தமாகவுள்ளதால் மக்கள் விசனம்!

மட்டக்களப்பு நகர் மாவட்ட ஆதார வைத்தியசாலையின் முனபாக வீதியின் இரு மருங்கிலும்உள்ள வடிகால்களில் இருந்து வரும் துர்நாற்றத்தால் சகிக்கமுடியாதுள்ளது என வைத்திய சாலைக்குச் செல்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுகாதாரமும், சுற்றாடலும் பேணும் வைத்திய அதிகாரிகள் உள்ள ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக சூழல் மாசடைந்துள்ளதால் நோயாளர்களின் நோய்களை எவ்வகையில் குணமாக்க முடியும் என்பது மக்களின் கேள்வியாகும். வைத்திய சாலைக்கு நாளொன்றுக்கு 3000க்கு மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். மேலும் அவ்வீதியின் அருகில் இரு உணவுச்சாலைகள் இருப்பதால் அவ்வுணவுச் சாலைகளின் கழிவுநீர்களும் இவ்வீதியின் அருகிலுள்ள வடிகால் மூலம் வடிந்து ஓடமுடியாது தேங்கிநிற்கிறது இதே இடத்தில் பஸ் தரிப்பிடமும் உள்ளதால் நோயாளிகளைப் பார்க்க தங்கிச்செல்ல வேண்டியுமுள்ளது. இதனால் சூழலை மாசடைய வைக்கும் ஈக்களின் அதிகரிப்பும், நுளம்புப் பெருக்கமும் அடிகோலக் கூடிய பகுதியாக மாறியுள்ளது. இதனால் உணவுச்சாலையில் உண்ணும் உணவுவகைகளிலும் ஈக்களினால் உண்டாகும் நோய்கள் பரவக்கூடிய வாய்ப்பு தோன்றியுள்ளதாகக் குறிப்பிடப்படுள்ளது.

எனவே மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு முன்பாக வுள்ள துர்நாற்றம் வீசும் வடிகால் களை மாநகர சபையினரும், சுகாதார வைத்திய அதிகாரிகளும் சூழல் மாசடைவதை தடுக்க, கூடியகவனம் செலுத்தப்பட வேண்டுமென பொது மக்கள் கேட்டுக்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'ஒரு கணம்' வீதி நாடகம்

யுனிசெப் வெண்புறா நிறுவனங்களின் அனுசரணையுடன் மகளிர் கலைபண்பாட்டுக் கழகத்தின் விடுதலைக் கலைஞர்கள் வழங்கும் கண்ணதாசன் ஆசிரியரின் "ஒரு கணம்" எனும் வீதிநாடகம் மக்கள் மத்தியில் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் அறிந்தும் அறியாமலும் விடும் தவறுகளை இந்நாடகம் வெளிப்படுத்துகின்றது.

இக் கலைஞர்கள் நெடுங்கேணி, தண்டுவான், பழம்பாசி, தட்டாமலை, ஒலுமடு, கீரிசுட்டான், முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டு, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் வீதிநாடகத்தினை இரவு பகல் என்று பாராது மக்களுக்கு வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# உதைபந்தாட்டப் போட்டியில் கிளி. ம. வி. அணி வெற்றி!

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கினால் பாடசாலைகளுக் கிடையில் நடைபெற்று வந்த கனிஷ்ட பிரிவு உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் கிளிநொச்சி ம.வி. அணி வெற்றி பெற்றுள்ளது.


உருத்திரபுரம் ம.வி.மைதானத்தில் நடைபெற்ற மேற்படி இறுதியாட்டத்தில் 15வயதுப் பிரிவில் வட்டக்கச்சி ம.வி.அணியை 3:0 என்ற கோல் எண்ணிக்கையிலும், 19 வயதுப்பிரிவில் உருத்திரபுரம் ம.வி.அணியை தண்ட உதைமூலம் 3:1 என்ற கோல் எண்ணிக்கையிலும் கிளிநொச்சி ம.வி. அணிகள் வெற்றிபெற்றன.

இப்போட்டிகளில் சிறப்பாட்டக்காரர்களாக 15வயதுப் பிரிவில் க.அனுசனும், 19வயதுப் பிரிவில் கு.தங்கராஜும் தெரிவுசெய்யப்பட்டனர்.






ஸ்பெயின் நாட்டில் காளையடக்கும் விளையாட்டில் தமது திறனைக் காட்டும் வீரர்.





வெற்றி விழாவில் இடம்பெற்ற அணி நடையும், கலை நிகழ்வும்

# மண்ணை மீட்பது எங்கள் கடமை இல்லாவிடில் அழிந்து விடுவோம்!

## தளபதி கேணல் தூர்க்கா

நிச்சயமாக இந்த மண்ணை மீட்பது எங்கள் கட்டாயக் கடமை. இல்லாதுவிடில் அழிந்துபோய் விடுவோம் என் நேற்றைய வெற்றிவிழா நிகழ்வில் பேசிய தளபதி கேணல் துர்க்கா அவர்கள் தெரிவித்தார்.

மேலும் அவர் தன்னுரையில்;

ஒரு மனிதனால் செய்யக்கூடிய உயர்ந்த அர்ப்பணிப்பு என்றால் தனது நாட்டுக்காக தனது உயிரைத் தியாகம் செய்வதே ஆகும்.

இதனைப்போல எமது தமிழீழத்தில் செய்யப்பட்ட இந்த உயிர்த்தியாகத்தால் தான் நாம் இன்று இந்த நிகழ்வை நடத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனையிறவுத் தளத்தைப் பொறுத்தவரையில் நாம் அறிந்த காலத்தில் இருந்தே எதிரியின் அடாவடித்தனத்தின் வடிவமாகவே இது வந்துள்ளது. இதற்காக இந்தத் தளத்தை நாம் கைப்பற்றும் முயற்சியாக ஆகாய கடல்வெளி நடவடிக்கையை மேற்கொண்டோம். அந்தச் சமரில் நாம் பெருமளவு உயிர்த்தியாகங்களைச் செய்தோம். இதன் மூலம் நிறைய அனுபவத்தைப் பெற்றோம். அதனூடாக நாம் நீண்ட வளர்ச்சியை அடைந்தோம்.

அதனைத் தொடர்ந்து எதிரி வெற்றிலைக்கேணி நடவடிக்கை பல வேகாய, சத்ஜெய என பல நடவடிக்கைகள் மூலம் ஆனையிறவுத் தளத்தை விஸ்தரித்தான். இத்தகைய விஸ்தரிப்பால் எமது மண்ணின் சிறப்புகள் அழிக்கப்பட்டன. அதாவது கடல் வளங்கள், விவசாய நிலங்கள், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், உப்பளம் எனப் எமது வளங்கள் நாசப்படுத்தப்பட்டன.

எமது மக்கள் தமது வாழ் விடத்தை, கல்வியை, உறவுகளை, எனப் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்தனர். இதனால் நாம் இந்தத் தளத்தை அழிக்கப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனையிறவைப் பொறுத்தவரை நாமும் விடத்தயாரில்லை, எதிரியும் விடுவதற்குத் தயாராக இல்லை. இதனால் நாம் முழுமையான முயற்சியை மேற்கொண்டு ஒரு துணிகரத் தாக்குதல் நடத்தி இத்தாவில் வரை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தோம். இந்தத் தாக்குதலில் எதிரி பல தோல்விகளைச் சந்தித்தான். இதனைப் பொறுக்க முடியாத நிலையில் எதிரியால் அடுத்த ஆண்டில் தீச்சுவாலை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த நடவடிக் கையில் எதிரி பெரும் தோல்வியை சந்தித்தான்.

தீச்சுவாலை சமர்க்களத்திலும் ஏராளமான சம்பவங்கள் நடைபெற்றன. அவற்றில் ஒரு சில சம்பவத்தைக் கூறலாம் என நினைக்கிறேன். கிளாலிப் பகுதியில் எமது முதலாவது லைனை உடைத்து எதிரி முன்னேறி வந்துவிட்டான். அப்போது முதலாவது லைனின் இரண்டு பக்கமும் இருந்த போராளிகளை இரண்டாவது லைனுக்குவரச் சொன்னோம்.

இரண்டாவது லைனைப் பலப்படுத்தி விட்டு முதலாவது லைனுக்குப் போவதற்கு வரச் சொன்னோம். ஆனால், அங்கு நின்ற கலைமதி எனும் போராளி ஆர்.பி.ஜீ. உடன் நின்றவர் வரமறுத்து தன்னிடம் உள்ள அனைத்துக் குண்டுகளும் தீரும்வரை தாக்கிப் பின்னர் வீரச்சாவடைந்து விட்டார்.

தீச்சுவாலை சம்பவத்துக்கு சில தினங்களுக்கு முன்னர் வீரகேசரி பத்திரிகையை போராளிகள் வாசித்துக் கொண்டிருந்தார்கள். சிகல உறுமய கட்சியைச் சேர்ந்த ஒருவரின் பேட்டி இருந்தது.

அதில் அவர் சொல்கிறார் இந்த நாட்டில் தமிழர்கள் விரும்பினால் வாழலாம் ஆனால் இது அவர்களின் சொத்து அல்ல, இது எமது பௌத்த சிங்கள நாடு. நாங்கள் தமிழர்களை வாழ விடுவோம். ஆனால் இது இவர்களின் சொத்து அல்ல என்று கூறுகின்றார்.

அப்படியாயின் இப்படியானவர்களுடன் எதைக் கதைப்பது? என்ன சமாதானம்? என்று அந்தப் போராளிகள் கூறினார்கள்.

இதற்கு, எல்லாமாக எங்களுக்குச் சிறந்த ஒரு நல்ல வழிநடத்தல் இருந்தது. ஒரு தாய்மை உணர்வோடு ஒரு மிகப் பெரிய சிறந்த வழிநடத்தல் எங்களுக்கு இருக்கிறது.

இந்தத் தலைமையில் சிறந்த நெறிப்படுத்தலில் அந்த தலைமை எங்களுக்கு திறந்துவிட்ட பெரிய பாதைக் கூடாக நாங்கள் நிச்சயமாக எங்களுடைய தமிழீழத்தை அடைவோம்.

இதற்கு எங்களுடைய மக்களின் பூரண ஒத்துழைப்பு வேண்டும். எங்களுடைய தமிழர்களைப் பொறுத்தவரை வீரம் செறிந்த வரலாறு இருக்கின்றது.

நிச்சயமாக இந்த மண்ணை மீட்க வேண்டியது எங்களுடைய கட்டாய கடமை. இல்லாதுவிட்டால் நாங்கள் அழிந்து போய்விடுவோம் என்றார்.

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் சங்கரலிங்கம்

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரமந்தனாறு 4ஆம் வாய்க்கால் விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட அப்பு என்று செல்லமாக அழைக்கப்படும் அம்பலவாணர் சங்கரலிங்கம் 28-04-2003 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் செல்லம்மாவின் அன்பு மகனும், முருகேசு சின்னத்தங்கத்தின் அன்பு மருமகனும், திருநாவுக்கரசு, திலகவதி, காலஞ்சென்றவர்களான முருகேசு, சிரோன்மணி, வாலாம்பிகை, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், மங்கையற்கரசி, ஆனந்தன் (பிரான்ஸ்), சுதான் (கனடா), செந்தமிழ்ச்செல்வி (பிரான்ஸ்), அமிர்தமலர், நளாநீதம், கோணேஸ் (பிரான்ஸ்), குகன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், இரத்தினம், பிறேமாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், முருகேசு நங்கீதமலர், ஜீவமலர், சிவகெங்கை, பாலசிங்கம், உதயகுமார், ஞானேஸ்வரி, விக்கினேஸ்வரி, மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மணி, தெய்வம், அருந்ததி (கொழும்பு), முருகானந்தன், அருள்மலர், கோபிகா, சிவபரன், சிவகிரோன், விஜயசிறி, விஜயதாஸ், சசிகாந், துர்க்கா, ரஜிதா, பானு, உதயதாஸ், சிவகாந், திவ்வியா, சிவகபில், நடேனராஸ், ரூபிகா, லக்ஷனா, விஜயகாந், சிவதரன், சிவகாந்தன், சிவதர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெனிக்கா, ரம்சிகா, நிதுர்ஜா, கயல், சுபலக்சன் ஆகியோரின் பூட்டனுமாவார். அன்னாரது பூதவுடல் அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைக்காக வைக்கப்பட்டு 30-04-2003 (நாளை) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக விசுவமடு 12ஆம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
முருகேசு.
(மருமகன்)

(3171)

### வெற்றிவிழாவில்...

வவுனியா மாவட்ட மக்கள் சார்பாக வெகுசன அமைப்புகள் ஒன்றியம் வழங்கிய வெற்றிக் கேடயத்தினையும், வவுனியா மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் வழங்கிய வெற்றிக் கேடயத்தினையும் மூத்த தளபதி கேணல் ஜெயம் பெற்றுக்கொண்டார்.

வவுனியா மாவட்ட மக்களில் ஒரு வரானகுலதேவராசா தேசியத் தலைவருக்கு வழங்கிய வெற்றிக்கேடயத்தினை மூத்தளபதி கேணல் ஜெயம் பெற்றுக் கொண்டார்.

முல்லைத்தீவு மக்கள் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் வழங்கிய வெற்றிக் கேடயத்தினை மாலதி படையணிச் சிறப்புத் தளபதி கேணல் விதுசா பெற்றுக் கொண்டார்.

### கரும்புலிகளின்...

யினை சிறப்புத் தளபதி ஆண்டான் ஏற்றிவைத்தார். தமிழீழ காவல்துறையின் கொடியினை பரிசோதகர் ரஞ்சித்குமார் ஏற்றிவைத்தார். கடற்புலிகளின் கொடியினை எழிற்சோரன் ஏற்றினார். சாள்ஸ் அன்ரனி படையணியின் கொடியினை சாள்ஸ் அன்ரனி படையணியின் சிறப்புத் தளபதி கோபித் ஏற்றிவைத்தார். குட்டிசிறி மோட்டார் படையணியின் கொடியினை கோபாலன் ஏற்றினார். இம்ரான் பாண்டியன் படையணியின் கொடியினை சிறப்புத்தளபதி கனியரசன் ஏற்றினார். கிட்டுப் பீரங்கிப் படையணியின் கொடியினை தளபதி கிராணி ஏற்றினார்.

சோதியா படையணியின் கொடியினை தளபதி மதுரம் ஏற்றிவைத்தார். அடுத்து ஆனையிறவுப் படைத்தள வெற்றிக்காக பனையில் அமைந்திருந்த சிறிலங்காப் படையினரின் ஆட்லறித் தளத்தைத் தகர்த்தழித்து வீரச்சாவடைந்த இரு கரும்புலிகளினதும் நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. கரும்புலிகளான மேஜர் சுதாஜினி, மேஜர் தனுஷன் ஆகியோர் நினைவாக அமைக்கப்பட்ட இந் நினைவுக்கல்லினை இரு கரும்புலிகளினதும் தந்தையர் திறந்து வைத்தனர்.

அடுத்து மலர்மாலையினையும், ஈகச்சுடரினையும் மாவீரர் அனுசன், சுதாஜினி ஆகியோரின் பெற்றோர்கள் ஏற்றிவைத்தனர். அனைத்து மாவீரர்களுக்குமான நினைவுக்கல்லிற்கான ஈகச்சுடரினை சோதியா படையணித் தளபதி மதுரம், மாலதி படையணித் தளபதி தமிழ்ச்செல்வி ஆகியோர் ஏற்றிவைத்தனர். மலர் வணக்கத்தினை மூத்த தளபதிகள் கேணல் தீபன், கேணல் பானு, தளபதி பொட்டுஅம்மான், தளபதி தியாகேஸ் உட்பட பலர் செலுத்தினர்.

அடுத்து மாவீரர்கள் நினைவாக மூன்று தென்னங்கன்றுகள் நாட்டப்பட்டன. முதல் இரண்டு தென்னங்கன்றுகளும் நிகழ்வு இடம்பெற்ற இடத்தில் கரும்புலித் தாக்குதல் நடத்தி வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெற்றோர்களால் நாட்டப்பட்டன. அடுத்த தென்னங்கன்று மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அவர்களால் நாட்டப்பட்டது.

அடுத்து சிறப்புரையினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அவர்கள், மூத்த தளபதி பொட்டுஅம்மான் அவர்கள் ஆகியோர் நிகழ்த்தினர். அத்துடன் ஆயுதக்கண்காட்சிமற்றும் ஆனையிறவுப் படைத்தள முகாம் அமைப்பு உட்பட பல வரைபடங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன. இதில் ஆட்லறிகள், பீரங்கிகள், கனரகத் துப்பாக்கிகள், இலகு துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், கைக்குண்டுகள், கண்ணிவெடிகள், துப்பாக்கிக் குண்டுகள் உட்பட பல வகை ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் என்பன வைக்கப்பட்டன.

### மீண்டும் யாழ். மண்ணில் பதிந்த எம் தடங்கள்

# ஆனையிறவு வெற்றிவிழா நிகழ்வில் தளபதி ஜெயம் வெளியிட்டார்

(அலுவலக செய்தியாளர்)

ஆனையிறவுப் பெருந்தள அழிப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவு தீச்சுவாலை முறியடிப்பு இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில் 'மீண்டும் யாழ். மண்ணில் பதிந்த எம் தடங்கள்' எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நேற்று இரவு 7.30 மணிக்கு ஓயாத அலைகள் -03 நடவடிக்கையில் வடபோர் முனைச் சமரில் ஆனையிறவு, பளை முதலானவை மீட்டெடுக்கப்பட்டதை நேரடியாக களமுனைகளில் இருந்து நேரடியாக போராளி சங்கர் அவர்களால் எழுதப்பட்ட இந் நூலினை தளபதி ஜெயம் அவர்கள் வெளியிட்டு வைக்க மாவீரரின் பெற்றோர் சின்னையா சுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார்.

இந்நூல் பற்றிய அறிமுக உரையினை புலிகளின் குரல் வானொலியின் செய்தி ஆசிரியர் தவபாலன் அவர்கள் நிகழ்த்தியுள்ளார். (பா)

### புலிகளின்...

மரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பதற்குப் புலிகள் கூறியுள்ள முக்கிய காரணங்கள் குறித்து இக்கூட்டத்தின் போது ஆராயப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து புதன் அல்லது வியாழக்கிழமைகளில் புலிகளுக்கான பதில் கடிதம் அனுப்பி வைக்கப்படலாம் என அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### விசேட சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா பொது வைத்தியசாலைக்கு யப்பானில் இருந்து விசேட வைத்தியர் குழு ஒன்று வருகை தந்திருப்பதால் உதட்டுப் பிளவு, கன்னப்பிளவு சத்திர சிகிச்சை பெறவிரும்புபவர்கள் நாளை வவுனியா பொது வைத்தியசாலைக்குச் சென்று அங்குள்ள பற் சிகிச்சைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

### பல்லாயிரம்...

இவ்விழாவையொட்டி சிவப்பு மஞ்சள் கொடிகளாலும் மின்சார விளக்குகளாலும் பளைப்பகுதி அலங்கரிக்கப்பட்டிருந்தது.

காலை முதல் இராணுவத்தினரிடம் இருந்து வெற்றிகொள்ளப்பட்ட ஆயுதக் கண்காட்சியும் இடம் பெற்றது. இதனை பொதுமக்கள் ஆர்முடன் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

மாலையில் சிறப்புற அமைக்கப்பட்ட இரண்டு மேடைகளில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாலை 4.30 மணியளவில் அரசியல்துறைத்துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சாள்ஸ் அன்ரனி படையணி, மாலதிபடையணி, சோதியா படையணி, காவல் துறையின்படையணி ஆகியவற்றின் அணிவகுப்பு மரியாதையினை வடபோர்முனை கட்டளைத்தளபதி கேணல் தீபன், மாலதிபடையணியின் சிறப்புத்தளபதி கேணல் விதுஷா ஆகியோர் ஏற்றனர்.

தலைமை உரையினை சோ.தங்கன் அவர்கள் நிகழ்த்தினார். அவர் தனது தலைமையுரையில் ஆனையிறவு பெருந்தளம் வெற்றி கொள்ளப்பட்டு மூன்றாண்டாகிய இன்று இந்த இடத்தில் இவ்வளவு மக்கள் கூடியிருக்கின்றமை பெருமை தரும் விடயம் எனவும், இவ் ஆனையிறவுப் பெருந்தளம் எமது உறவுகளை பிரித்து வைத்தது மட்டுமல்லாது, எத்தனை உயிர்களை இந்தத் தளத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் அழித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

அடுத்து சங்கநாதம் நடன நிகழ்வு இடம்பெற்றது. மாவீரர் வணக்க நடனத்தினை கலை பண்பாட்டுக்கழக கலைஞர்களும், கலை பண்பாட்டுக்கழக மகளிர் அணியினரால் தமிழீழ தேசியத் தலைவருக்கான வாழ்த்து நடனமும் இடம் பெற்றது.

அடுத்து சிறப்புரைகளை கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை, கேணல் துர்க்கா ஆகியோர் நிகழ்த்தினர். இந்நிகழ்வுகளில் பொன்னம்மான் கண்ணிவெடி பிரிவைச் சேர்ந்த ஆனையிறவு பெருந்தள அழிப்பில் ஒருகாலை இழந்த போராளியின் தனி நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து படையணியின் நாடக நிகழ்வுகளும் இடம்பெற்றன.